3

# அல்-அஹ்லாக் வஸ்ஸுலூக்

இஸ்லாமிய வாழ்வுமுறை மனித சமூகத்தின் வெற்றிக்காக இறைவனால் வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இத்திட்டமானது ஒழுக்கத்தாலும் பண்பாட்டாலும் வளப்படுத்தப்பட்டுள்ளது. அதனால்தான் இம்மை, மறுமை வாழ்வு இரண்டையும் இணைத்து, இரு உலகிலும் மனித இனத்தின் வெற்றியை அடிப்படையாகக்கொண்டு, அல்லாஹ்வால் விதிக்கப்பட்ட ஈடிணையற்ற வாழ்க்கைமுறையெனக் கொள்ளப்படுகின்றது.

ஈமான் கொண்டு நல் அமல் புரிகின்றவர்கள் மு∴மின்கள் எனப்படுகின்றனர். ‘‘உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் மிக்க நற்குணமுள்ளவரேயாகும்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள். ஈமான் கொண்டதன் பிரதிபலிப்பு அவனின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. அச்செயற்பாடே நற்பண்புகளும் நல்லொழுக்கமுமாகும். எல்லாச் சமயங்களும் நற்குணத்தையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்துகின்றன. ஒழுக்கம் சந்தோசமான சமூக வாழ்வுக்கு மட்டுமல்லாது நிம்மதியான ஆன்மீக ஈடேற்றத்துக்கும் இன்றியமையாதது. எனவேதான் இஸ்லாம் நல்லொழுக்கத்தை மிகமிக வற்புறுத்துகின்றது. இதனையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘நான் நற்பண்புகளைப் பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்’’ (முவத்தா) எனச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

உண்மையான மு∴மின்கள் யாரெனில், அல்லாஹ் என்று (அவர் முன்) கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கும். அவனுடைய வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவை அவர்களுடைய ஈமானை அதிகரிக்கும். (8:2) என அல்-குர்ஆன் கூறுகின்றது.

குறிப்பிட்ட நேரத்தில் உள்ளச்சத்துடன் தொழுதல், ஸக்காத் கொடுத்தல், அமானிதத்தையும் வாக்குறுதியையும் பேணி நடத்தல், கற்பைக் காத்துக்கொள்ளல், வீணான காரியங்களிலிருந்து விலகி நிற்றல் போன்றவையும் ஈமான் கொண்டவனின் பண்புகள் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. அவர்கள் உள்ளத்தில் தூய்மையும் (இக்லாஸ்) வாக்கில் உண்மையும் செயலில் நேர்மையும் கொண்டிருப்பர்.

‘‘ரஹ்மானுடைய நல்லடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களுடன் தர்க்கம் செய்ய நேரிட்டால் ஸலாமுன் எனக் கூறி விலகி விடுவார்கள்’’ (25:63) என்று ஈமான் கொண்ட மு∴மினின் பண்பை அல்-குர்ஆன் எடுத்துக் காட்டுகின்றது.


இலவச விநியோகத்திற்காக

ஈமான் கொண்ட மு∴மின் வெட்கமுடையவனாக இருப்பான். பாவம் செய்ய வெட்கப்படுவான். ஒழுக்கக்கேடான காரியங்களை இரகசியமாகவோ பகிரங்கமாகவோ செய்ய மாட்டான். தவறுதலாக அவ்வாறு நடந்துவிட்டாலும் அதனைப் பகிரங்கப் படுத்தமாட்டான். அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருப்பான்.

''ஈமானும் வெட்கமும் இணைபிரியாத் தோழர்கள். ஒன்று போய் விட்டால் மற்றதும் போய் விடும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (ஹாக்கிம்) எனவே, வெட்கமில்லாதவன் உண்மை மு∴மினாக இருக்க முடியாது. ''அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் ஈமான் கொண்ட மனிதன் நல்லவற்றையே பேசட்டும். இல்லையேல், மௌனமாக இருக்கட்டும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.'' (புஹாரி)

''உங்கள் பற்களைச் சுத்தம் செய்து கொள்ளுங்கள். அது தூய்மையின் ஒரு பகுதியாகும். தூய்மை ஈமானை வெளிப்படுத்துகின்றது.'' ''எந்த உள்ளத்தில் தூய்மை குடியிருக்கிறதோ அது சுவர்க்கத்தில் குடியிருக்கும்.'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (தபரானி)

மு∴மினின் உள்ளமும் புறமும் தூய்மையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் தமது எல்லாச் செயற்பாடுகளையும் அல்லாஹ்வின் திருப்தியை நாடியே செய்வர். உலக இன்பங்களையோ, இலாபங்களையோ எதிர்பார்க்கமாட்டார்கள். நயவஞ்சகப் போக்கும் இவர்களிடம் காணப்படமாட்டாது.

இவ்வாறே ஈமான் கொண்டவர்களின் பண்பாடுகள் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ஸஹீஹான ஹதீஸ்களின்படி பெரியோர்கள் செய்யும் துஆப் பிரார்த்தனைகள் இறைவனிடத்தில் அங்கீகரிக்கப்படும் என்பதை அறிகின்றோம். இதனால் பெரியோர்களை மதிப்பது, அவர்களின் சொற்கேட்டு நடப்பது, உதவிகள் புரிவது, தேவையின் போது அவர்களைச் சுமந்து செல்வது, அவர்களுக்குரிய உணவு வகைகளைத் தேடிக்கொடுப்பது போன்ற செயல்கள் இஸ்லாமிய நல்லொழுக்கங்களாக மதிக்கப்படுகின்றன. இதனால்தான்

சிறியோர்களுக்கு இரக்கம் காட்டாதோரும் பெரியோர்களுக்கு மதிப்பளிக்காதோரும் எம்மைச் சேர்ந்தவன் அல்ல. (அல்ஹதீஸ்) என நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

''இறுதிநாளில் மு∴மினுடைய (நன்மைத்) தட்டில் வைக்கக்கூடிய மிகப்பாரமான நற்கிரியை நிச்சயமாக நற்குணமாகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)

இந்த உலகில் செய்யப்பட்ட எல்லாச் செயற்பாடுகளும் இறுதி நாளில் அல்லாஹ்வின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும். அப்போது அந்தச் செயல்களில் அல்லாஹ்வுக்காகச் செய்யற்பட்டவை மாத்திரம் தனியாகப் பிரித்தெடுக்கப்படும். ஏனைய நோக்கங்களுக்காக செய்யற்பட்டவை நரகநெருப்பில் எறியப்படும். (பைஹகி)

தூய்மையுடன் நடந்துகொள்வீராக அப்போது சொற்ப நற்காரியங்களே உமக்குப் போதுமானதாக இருக்கும். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்குர்ஆனில் ''விசுவாசங்கொண்டு நற்கருமங்கள் செய்தவர்களுக்கு மறுமையில் முழுக் கூலியும் வழங்கப்படும். அல்லாஹ் தனது கிருபையைத் தாராளமாக அதிகமாகக் கொடுப்பான்'' எனக் கூறப்படுகின்றது.

நற்செயல்கள் என்பது ஈமான் என்ற மரத்தின் கனிகளாகும். ஒரு மரம் அது தரும் கனிகள் மூலமே அடையாளம் காணப்படுகிறது.

ஆகவே ஈமான் கொண்டு நற்பண்புகளுடன் வாழுவோமாக!

## செயற்பாடுகள்

சுருக்கமான விடை தருக.

1. ஒரு மு∴மினிடம் காணப்படவேண்டிய பண்புகள் ஐந்தைத் தருக?
2. நற்குணம் பற்றிக் கூறப்படும் அல்குர்ஆன் வசனங்களையும், ஹதிஸ்களையும் எழுதுக?
3. இந்த உலகில் செய்த எல்லாச் செயற்பாடுகளும் எங்கு சமர்ப்பிக்கப்படும்?
4. இஸ்லாமிய வாழ்வுமுறை எதனால் வளப்படுத்தப்பட்டுள்ளது?
5. ''உங்கள் பற்களை சுத்தம் செய்துகொள்ளுங்கள்'' இவ்வசனத்தின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?



இலவச விநியோகத்திற்காக

## 3.1 ஈமானியப் பண்புகள்

இறை திருப்தியை நாடி சில முக்கிய பண்புகளை நாம் வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

### இஹ்லாஸ்

இக்லாஸ் என்பது வேறு ஒரு நோக்கமும் கலவாத பரிசுத்த எண்ணமாகும். அதாவது எல்லாக் காரியங்களும் அல்லாஹ்வுக்காக என்றே செய்யப்பட வேண்டும் என்பதாகும். இது சொல்லில் மட்டுமன்றி எண்ணத்திலும் உறுதியாகப் பதிந்து செயலில் பிரதிபலிக்க வேண்டும்.

எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒரு ஒழுங்கு முறையான வரம்புக்குள் கொண்டுவந்து அன்றாட வாழ்வை நடாத்த வேண்டுமென்று இஸ்லாம் கூறுகிறது. எண்ணமே சொல்லுக்கும் செயலுக்கும் காரணமாகின்றது.

*நபியே! ‘‘அல்லாஹ்வுக்காகவே சுத்தமான எண்ணத்துடன் வணங்கும்படி நிச்சயமாக எனக்குக் கட்டளையிடப்படுகின்றது என்று நீர் சொல்லும்.’’ என அல்லாஹ் கூறுகிறான். வணக்கம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என்றும் பரிசுத்தமான எண்ணத்துடன் வணங்கும்படியும் தனக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது.’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.*

*அல்குர்ஆனில் ‘‘எவன் தன் இறைவனை விரும்புகிறானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணைவைக்காது அவனையே வணங்கி வருவானாக’’ (18:110) எனக் கூறுகிறான்.*

பரிசுத்தமான எண்ணத்துடன் நற்கருமம் செய்தவர்களுக்குச் சோபனம் உண்டாவதாக, அவர்களே நேர்வழியைக் காட்டக்கூடியவர்கள், அவர்களாலேயே அநியாயமான காரியங்கள் எல்லாம் நீங்குகின்றன.

மனிதன் தன் மனதின் எண்ணங்களை நோட்டமிடல் வேண்டும். நல்ல எண்ணம் உண்டானால் அதன்படி செய்ய வேண்டும். கெட்ட எண்ணம் உண்டானால் அதை உடனே உதறித்தள்ளிவிட வேண்டும். இதனாலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ‘‘நீ ஒரு விடயத்தை எண்ணும் போது அல்லாஹ்விற்குப் பயந்துகொள்’’ என்று கூறியுள்ளார்கள். ஒவ்வொரு காரியத்தை செய்யும் போதும் இது இச்சைக்காக செய்வதா? அல்லாஹ்வுக்காகச் செய்வதா? என்பதைப்பற்றி நோட்டமிட வேண்டும். நாம் வணக்கம் செலுத்துவதும், தருமம் கொடுப்பதும், உபகாரம் செய்வதும், அல்லாஹ்வுடைய திருப்தியை நாடிச்செய்கிறோமா? மக்களுடைய மதிப்பை நாடிச்செய்கிறோமா? என்பதை நோட்டமிடல் வேண்டும். அல்லாஹ்வுக்காக அல்லாமல் மக்கள் மெச்சுவதற்காகச் செய்த காரியங்களால் யாதொரு பயனுமில்லை என்பதை நன்குணரவேண்டும். ஆகவே ஈமான் கொண்ட அனைவரும் தூய எண்ணத்துடன் நற்கிரியைகள் புரிந்து ஈருலகிலும் வெற்றி பெறவேண்டும்.

## முஹாஸபா

முஹாஸபா என்பது சுயவிசாரணையாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளையும் பற்றி சுயவிசாரணை செய்து கொள்வதையே இது குறிக்கும்.

காலையில் படுக்கைவிட்டு எழுந்ததும் அல்லாஹ்வுக்குத் துதி செலுத்திவிட்டு, அன்று பகலில் நற்கருமங்களைச் செய்ய வேண்டும் என்றும், தீயகாரியங்களை விட்டும் விலகி இருக்க வேண்டுமென்றும் திடசங்கற்பம் (உறுதி) செய்து கொள்ள வேண்டும். அதன்படி நடக்கவும் முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு இரவும் உறங்கச் செல்லும் போது அன்று பகலில் தான் செய்த கருமங்களைப்பற்றி சிந்தித்து நோட்டமிட வேண்டும். நற்கருமங்கள் செய்திருந்தால் அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முறையில் அவனுக்கு சுஜூது செய்ய வேண்டும். தான் செய்த கருமங்களின் கணக்கை சரிபார்க்க வேண்டும். அல்லாஹ்வினால் விலக்கப்பட்ட செயல்கள் நிகழ்ந்திருந்தால் அதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்பதும் பயனுடையதாகும். இவ்வாறு தனது செயல்களைக் கணக்கிட்டுப் பார்த்து அல்லாஹ்வினால் விலக்கப்பட்ட செயல்களை விலக்கி அதிகமாக நல்லமல்களைப் புரிதல் வேண்டும்.

நாம் உலகத்தில் வாழ்ந்திருக்கும் போது செய்த கருமங்களைப்பற்றி மறுமை நாளில் அல்லாஹ் நம்மிடம் கணக்கு கேட்பான். என்பதை ஞாபகத்திலிருத்தி, நாமே நம்மிடம் அன்றாடம் கணக்கு கேட்க வேண்டும்.

> ‘‘எவன் தனது செயல்களை கணக்கிட்டுப் பார்த்து தனது மரணத்துக்குப்பின் பயன்படத்தக்கதை செய்கின்றானோ அவனே அறிவாளி’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

நீங்கள் விசாரிக்கப்படும் முன்பு உங்களை நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய செயல்கள் நிறுக்கப்படும் முன்பு அவற்றை நீங்களே நிறுத்துப் பாருங்கள் என்று உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆகவே, வியாபாரியானவன் அன்றன்று இரவு தனது வியாபாரத்திலுள்ள வரவையும் செலவையும் சரிபார்த்துக் கணக்கிடுவது போல மனிதன் தனது அன்றாட செயற்பாடுகளைப் படுக்கைக்குச் செல்லும் போது மீளாய்வு செய்து அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்திக்குமுகமாப் பாவமன்னிப்புக் கோருவதுடன், தான் செய்த நன்மைகளை ஆராய்ந்து பாவங்களிலிருந்து நீங்கி நல்லமல் புரியவும் வேண்டும்.

### செயற்பாடு

சுருக்கமான விடை தருக.

1. ‘முஹாஸபா’ என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது?

2. முஹாஸபாவை நீர் எப்போது எவ்வாறு மேற்கொள்வீர்?

3. முஹாஸபா மூலம் உனது வாழ்வில் நீர் அவதானித்த மாற்றம் யாது?

## 3.2 நாவைப் பேணுவோம்

அல்லாஹ் இவ்வுலகில் மனிதனை மிக உயர்ந்த அழகான படைப்பாகப் படைத்துள்ளான். பல்வேறு உறுப்புக்களை வழங்கி வெவ்வேறு காரியங்களைச் செயற்படுத்தச் செய்துள்ளான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: எவருடைய நாவினின்றும், கரத்தினின்றும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றிருக்கின்றனரோ அவர் தான் முஸ்லிம். மேலும், எவர் அல்லாஹ் தடுத்த செயல்களில் இருந்து விலகிவிட்டாரோ அவர் தான் முஹாஜிர் (இறைவனுக்காக அனைத்தும் துறந்தவர்) ஆவார். (புஹாரி, முஸ்லிம்) என்று கூறியுள்ளார்கள்.

எவருடைய கரத்தாலும் நாவாலும் பிற முஸ்லிம்கள் துன்புறுத்தப்படவில்லையோ அவரே உண்மையான முஸ்லிம் என்பது ஹதீஸாகும். எவர் தனது நாவால் எந்த முஸ்லிமைப் பற்றியும் புறம் பேசாமலும், கோள் சொல்லாமலும், மனதைப் புண்படுத்தாமலும், பொல்லாங்கு சொல்லாமலும், வசைமாரி பொழியாமலும், கேலி, கிண்டல் செய்யாமாலும் இருக்கின்றாரோ அவர் தான் உண்மையான முஸ்லிம் ஆவான்.

மிகக் கவனமாகப் பயன்படுத்த வேண்டிய உறுப்பு நாவாகும். இந்தப் பூமியில் அதிக காலம் சிறை வைக்க வேண்டிய உறுப்பு நாவைத் தவிர வேறொன்றும் இல்லை (தபரானி) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஒரு தடவை அபூதர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தமக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுக்குப் பயப்படும்படி நான் உமக்கு உபதேசம் செய்கிறேன். ஏனெனில், அல்லாஹ்வுக்குப் பயப்படுவது உம்முடைய எல்லாக் காரியங்களையும் அழகாகவும், செம்மையாகவும் ஆக்கும் என்று கூறினார்கள். திரும்பவும் உபதேசம் செய்யும்படி கேட்க, ''நீர் அல்-குர்ஆன் ஓதுவதையும், மகிமையும், வலிமையுமுள்ள அல்லாஹ்வைப் பற்றிச் சிந்தனை செய்வதையும் கடைப்பிடித்துக் கொள்ளும். அப்படிச் செய்வீராயின், அது வானத்தில் உம்மை ஞாபகப்படுத்த ஏதுவாகும். பூமியில் உமக்கு (ஞான) ஒளியாயிருக்கும்'' என்று கூறினார்கள். இன்னும் உபதேசம் செய்யும்படி கேட்க, ''நீர் மௌனத்தைக் கடைப்பிடித்துக் கொள்ளும். அப்படிச் செய்வீரானால் ஷைத்தான் உம்மைவிட்டு ஓட்டம் பிடிப்பான் அது உம்முடைய தீனுடைய காரியங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்'' என அருளினார்கள்.

மேலும் உபதேசம் செய்யும்படி கேட்க, ''அதிகமாய் சிரியாதே அப்படிச் சிரிப்பதால் இருதயம் உயிரற்றுப் போகிறது. முகத்தின் பிரகாசம் மங்கி விடுகிறது'' என்று அவர்கள் கூறினார்கள். மேலும் உபதேசம் செய்யும்படி கேட்க, ''மக்களுக்கு கசப்பாயிருந்தாலும் உண்மையையே பேசும், வாயை மூடியவன் விமோசனம் பெற்றான்'' என்று கூறினார்கள். மேலும் உபதேசம் செய்யும்படி கேட்க, ''அல்லாஹ்வுடைய காரியத்திற்காக உம்மைத் தூஷனை செய்கின்றவர்களின் தூஷனைக்குப் பயப்படவேண்டாம்'' என்று கூறினார்கள். மேலும் உபதேசம் செய்யும்படி கேட்க, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''உம்மிடமுள்ள குறைகளையே தெரிந்துகொள்ள முயற்ச்சிப்பாயாக. அவ்வாறு முயற்சிப்பதால் பிறருடைய குறைகளைத் தேடுவதிலிருந்தும் அது உம்மை விலகிக்கொள்ளும்'' என்று கூறினார்கள்.

மேலும் ‘‘சுமப்பதற்கு இலேசாகவும் நன்மை தீமைகள் நிறுக்கப்படும் தராசில் கனமாகவும் இருக்கக்கூடியவை மௌனமும் நற்குணமுமாகும்’’ என அருளினார்கள்.

‘‘அல்லாஹ் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்ட மனிதன் நல்லதையே பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருக்கட்டும்’’ (புகாரி) அல்லாஹ்வை அஞ்சி வாழும் ஒரு விசுவாசி தனது வாழ்வில் அணிகலனாகப் பெறவேண்டிய அவசியமான பண்புகளில், உண்மை உரைக்கும் உயர்ந்த பண்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இது மனிதனை முழுமையாக பக்குவப்படுத்தக் கூடிய உயர்ந்த குணமாகும். இறைவன் அல்-குர்ஆனில்

**விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள் மேலும் நீங்கள் உண்மையாளர்களுடன் இருங்கள்!’’ எனக் குறிப்பிடுகின்றான்.**

உண்மை உரைப்பதானது விசுவாசிகளிடம் நேர்மை, நீதி போன்ற பண்புகளை உருவாக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். மேலும் உண்மை உரைப்பதானது விசுவாசியின் குணமாக இருப்பது போல் பொய் உரைப்பது முனாபிக் எனும் நயவஞ்சகனின் குணமாகவும் காணப்படுகின்றது.

**‘‘பொய் சொல்வோர் அழிந்து போவர்’’ (51:10)**

அத்துடன் வாழ்வில் சத்தியத்தைப் பேணுவது மலக்குகளின் பண்பாகும். அல்லாஹ் திருமறையில் ‘‘அவனுடைய தூதருக்கு வழிப்பட்ட விசுவாசிகள், மறுமையில் சுவர்க்கத்தில் நபிமார்களோடும், உண்மையாளர்களோடும், தியாகிகளோடும் இருப்பார்கள்’’ எனக் குறிப்பிடுகின்றான்.

மனிதனுடைய கெட்ட நடத்தைகள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குவது பொய் உரைப்பதாகும். இது விசுவாசியின் உள்ளத்தை இருட்டறையாக மாற்றிவிடுகின்றது.

**‘‘பொய்யை விடுவது பாவ ஆசைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு வழியாகும். நீங்கள் உண்மையைக் கடைப்பிடியுங்கள். அது உங்களை நன்மையின் பக்கம் இட்டுச்செல்லும். பின்னர், அந்த நன்மை உங்களை சுவர்க்கத்தின்பால் இட்டுச்செல்லும’’ (ஹதீஸ்)**

ஒரு விசுவாசி பொய்பேசும் போது ஈமானைப் பெற்றவனாக இருக்கமுடியாது. ஏனெனில் ஈமானும் பொய்யும் ஒன்று சேரமாட்டாது. இதையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘பொய்பேசும் ஒருவன் விசுவாசியாக இருந்துகொண்டு பொய்பேசமாட்டான்’’ என பிரஸ்தாபித்தார்கள். நாம் ஒருவரைச் சந்திக்கும் போது ஸலாம் கூறவேண்டும். ஒருவர் எமக்கு உதவி செய்யும் போது அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். ‘‘ஜஸாகல்லாஹு ஹைரன்’’ என்று கூறவேண்டும். நாம் பேசுகின்ற பேச்சுக்கள் பிறருக்கு தீங்கு இல்லாததாகவும், பாவமற்றதாகவும் அமைய வேண்டும்.

நாம் தனிப்பட்ட இடங்களில் பேசுவதாயினும் சரி, பொது இடங்களில் பேசுவதாயினும் சரி அமைதியாக, அடக்கமான குரலில் தெளிவாகவும் அதே நேரத்தில் இஸ்லாத்தில் அங்கீகாரம் பெற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

**‘‘அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி நன்மையான விடயங்களைப்பற்றி மக்களிடம் பேசும் போது அவர்களுக்கு மகத்தான நற்கூலி கிடைக்கும்’’. (4:114)**

ஒரு மனிதனின் ஈமான் சீரானதாக இருக்க வேண்டுமாயின் அவனது ‘‘நாக்கு’’ சீராக இருக்கவேண்டும். அவனது நாக்கு சீராக இருந்தால் தான் அவனது இதயம் சீராக இருக்கும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார் (அஹ்மத்). இதுநாவின் செயற்பாடானது உள்ளத்துடனும், ஈமானுடனும் தொடர்புடையது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இது தவிர பிறரைப் பாராட்டுவது, வாழ்த்துவது, அல்லாஹ்வைப் புகழ்வது போன்றவையும் நாவின் மூலமே நிகழ்கின்றன. முஸ்லிம்களைச் சந்திக்கும் போது ஸலாம் கூறி வாழ்த்துவதும், முஸாபஹா செய்வதும், பிறரை நல்லமுறையில் விசாரிப்பதும் இஸ்லாமியப் பண்பாகும். இவ்வேளையில் வரம்புமீறி நடக்காமல் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். வாழ்த்தும் பாராட்டும் உண்மையானவையாக இருக்க வேண்டும்.

நல்லவற்றைப் பேசும்போது மக்களிடையே அன்பு பரஸ்பரம் ஒற்றுமை ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது. நாவினால் நன்மைகளும், விபரீதங்களும் ஏற்படுகின்றன. விபரீதத்தினால் சமூகங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படுகின்றன. தனிமனித, சமூக உறவுகளை வலியுறுத்தும் இஸ்லாம் அவ்வுறவுகள் பாதிப்படையக்கூடிய பல்வேறு காரணிகளை அடியிலேயே கிள்ளி எறிய கூறியுள்ள பல ஆலோசனைகளில் தீயவார்த்தைகளைத் தவிர்த்துக்கொள்வதும் ஒன்றாகும். மனிதன் எச்சந்தர்ப்பத்திலும் தீயவார்த்தைகளைப் பேசக்கூடாது என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். ‘‘நபியே நீர் மேலான நற்குணத்தில் இருக்கின்றீர்.’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்த இறைவன் அவர்கள் வேதப்பிரசாரம் செய்யும் முறை பின்வருமாறு அமையவேண்டும் என கட்டளை பிறப்பித்துள்ளது.

**‘‘நபியே மக்களை நீங்கள் நேர்வழியில் அழைக்கும் போது நாணம், நல்லுபதேசம் என்பவற்றைக் கொண்டு அழையுங்கள். தீயவார்த்தைகளை தவிர்த்து கொள்ளுங்கள்.’’ (அல்-குர்ஆன்)**

என்று பிறப்பித்துள்ள கட்டளை சாதாரண முஸ்லிம்களால் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். உண்மையில் எமது நாவும், நாவிலிருந்து தெறிக்கின்ற வார்த்தைகளும், மற்றவர்களை மட்டுமல்லாது எம்மையும் பல பிரச்சனைகளுக்கு ஆளாக்கும் என்பது அனுபவ உண்மையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘யாராவது தாடைகளுக்கிடையில் இருப்பதையும், இரு தொடைகளுக்கிடையில் இருப்பதையும் பாதுகாத்துக்கொள்வதாக உத்தரவாதம் அளித்தால் அவனுக்கு நான் சுவர்க்கத்தைப் பெற்றுத்தருவதாக உத்தரவாதம் அளிப்பேன்’’ எனக் கூறியுள்ளார்கள். மேற்கண்ட ஹதீஸின் மூலம் ஒரு மனிதன் சுவர்க்கம் நுழைவதா அல்லது நரகம் நுழைவதா என்பதை இரண்டு தாடைகளுக்கு இடையே இருந்து வெளிவரும் வார்த்தைகளைக் கொண்டும் இரண்டு தொடைகளுக்கு இடையே இருக்கின்ற மர்மஸ்த்தானங்களின் விவரீத ஆசைகளைத் தவிர்த்துக்கொள்வதைக் கொண்டும் முடிவு செய்து கொள்ள வேண்டும் என்பது தெளிவாகின்றது.

ஹஸ்ரத் அலி(ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள் ‘‘உன் நாவு சிங்கம் அதை கட்டிப்பாதுகாத்தால் அது உன்னைப் பாதுகாக்கும். அதனை அவிழ்த்து விட்டால் உன்னையே அது வேட்டையாடிவிடும்’’ என்றார்கள்.

தீயவார்த்தைகள் மூலமாகப் பாவத்தை செய்த மனிதன் தன்னில் மட்டுமன்றி பிறருக்கும் அறிமுகமாகின்றான். அதனால் அவன் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் அவனை மக்களுக்குக் காட்டிக் கொடுக்கின்றன. இதனால் அவனது பேச்சை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்பற்றி எச்சரிக்கையாக இருப்பார்கள். அவனோடு கதைப்பதற்கு மக்கள் பயப்படுவர். அவனால் சண்டைகள் மூழும் பிரிவினைகள் தோன்றும். அமைதிக்குப் பங்கம் ஏற்படும். இறுதியில் அவன் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுவான்.

## ஏனைய உறுப்புக்களைப் பேணல்

மனம், வாக்கு, கண், கை, கால் ஆகிய உறுப்புகளாலும் பாவங்கள் செய்யப் படுகின்றன. ஆனாலும் மனம், வாக்கு இரண்டினாலும் செய்யப்படுகின்ற பாவங்கள் பரவலானது. விளைவுகளும் பாரதூரமானவை. மேலும் உடம்பினால் செய்யப்படும் பாவங்கள் அதிகமானவை. பிறரும் பின்பற்றத் தூண்டுபவை. எமது ஏனைய உறுப்புக்களால் செய்யப்படும் பாவங்களையும் நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். கொலை, கொள்ளை, களவு, விபச்சாரம், சூது, பொய்சத்தியம், அபாண்ட பழி சுமத்தல், காணாததை கண்டேன் என்று கூறுதல் முதலான பல்வேறு பாவங்கள் எமது உறுப்புக்களால் நிகழ்கின்றன.

அவன் தன்னால் பாதிக்கப்பட்டவனைப்பற்றிச் சிந்தித்தால் அவன் திருந்த வழிகிடைக்கும். ஒவ்வொரு மனிதனும் தனக்காக மாத்திரம் வாழ்வதில்லை பிறருக்காகவும் வாழ்கிறான். பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் உபத்திரவம் செய்யாது வாழவேண்டும் என்பது இஸ்லாத்தின் கோட்பாடாகும். தீங்கு விளைவிப்பதனால் சமூகம் சீரழிகின்றது. அவனை ஒழிப்பதற்காக மக்கள் திட்டம் தீட்டுவர். உயிர், பணம், நேரம், கல்வி ஆகியன வீணாகின்றன. சிலவேளை இவனைக் கருவியாகப் பயன்படுத்தித் தமது எதிரிகளைப் பழிவாங்கவும் செய்வர். இதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘உனக்கு உதவி செய்பவனுக்கும் உதவி செய் உபத்திரவம் செய்பவனுக்கும் உதவி செய்’’ என அருளியுள்ளார்கள்.

உபத்திரவம் செய்பவருக்கு உதவி செய்வது எப்படி என்று ஸஹாபாக்கள் விசாரித்தார்கள். ‘‘அவன் அந்தப் பாவத்தை செய்யாமல் தடுப்பதே அவனுக்குச் செய்யும் உதவி’’ என்றார்கள். எனவே ஈமானில் உறுதி கொண்டு உண்மையான விசுவாசியாக வாழ்வது அனைவரதும் கடமையாகும்.

### செயற்பாடுகள்

சுருக்கமாக விடை தருக.

1. நாவைப் பற்றிக் கூறிய ஹதீஸ்களை எழுதுக?
2. நாவை ஏன் பாதுகாக்க வேண்டும்?
3. ஈமான் சீரானதாக அமைய வேண்டுமாயின் சீராக அமைய வேண்டிய உறுப்புக்கள் யாவை?
4. தீயவார்த்தைகளால் ஏற்படும் விளைவுகள் யாவை?
5. தனிமனித சமூக உறவுகளை ‘‘நாக்கு’’ எவ்வாறு ஏற்படுத்த முடியும்?
6. உண்மையின் மகிமை யாது?
7. சிறை வைக்கவேண்டிய உறுப்பு எது? ஏன் அவ்வாறு கூறப்படுகிறது?

# 3.3 அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள்

ஈமான் கொண்ட ஒவ்வொரு மனிதனும் மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கடைப் பிடிப்பது கட்டாயமாகவுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தன் தனிப்பட்ட வாழ்வில் நல்லொழுக்கம் உடையவனாகவும் பயபக்தி உடையவனாகவும் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் எதிர்பார்க்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்பும், பண்பும், அழகும், பக்தியும் ஒருங்கே அமையப்பெற்றவர்களாகவும், பொறுப்புள்ள குடும்பத்தலைவராகவும் நாணயமுள்ள வர்த்தகராகவும், வீரமுள்ள தளபதியாகவும், தலைசிறந்த சீர்திருத்தவாதியாகவும், நீதிவழுவா ஆட்சியாளராகவும் திகழ்ந்தார்கள். இவ்வாறே ஒவ்வொரு முஸ்லிமும் ஒழுக வேண்டுமென இஸ்லாம் இயம்புகின்றது.

தனக்காகச் செயலாற்றும் போதும் பிறருக்காகச் செயலாற்றும் போதும் ஒரு முஸ்லிம் நீதியையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பண்புகள் இல்லாமையாற்தான் மனிதனை மனிதன் மதிக்காமையும், கொலை செய்யக்கூடிய நிலைமையும் ஏற்படுகின்றது. தீயசக்திகள் உருவாகவும் வழிகோலுகின்றது. இன்று தகுதியற்றவர்கள் உயர்பதவியிலும் தகுதியுள்ளவர்கள் எப்பதவி இல்லாமலும் கவலையில் ஆழ்ந்திருக்கின்றனர். செல்வந்தர்கள் இலஞ்சம் கொடுத்தும் பல ஊழல்கள் செய்தும் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்கின்றார்கள். இதனால் பல அநியாயங்கள் தலைதூக்கியுள்ளன.

இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''தகுதியான திறமைமிக்க ஒரு மனிதர் இருக்கும் போது அவரை புறக்கணித்துவிட்டு வேறு தகுதியற்றவர்களை நியமிப்பவர், அல்லாஹ், அவனது தூதர், முஸ்லிம்கள் ஆகிய அனைவருக்கும் துரோகம் செய்தவர் ஆவார்.'' (ஹாகிம்) எனக் கூறியுள்ளார்கள். ஆகவே எண்ணம், சொல், செயல் அனைத்திலும் வாய்மையையும், நேர்மையையும், நீதியையும் கடைப்பித்தல் வேண்டும். அல்லாஹ் எப்போதும் தன்னை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்துடன் பாரபட்சம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும்.

நியாயம் வழங்குபவர்களை அல்லாஹ் நிச்சயமாக நேசிக்கின்றான். மனிதன் அன்பு எனும் குணத்தைக் கைக்கொள்ளும் போது நீதியில் முன்னேறிச் செல்கிறான். தன்னைப்போல் பிறரையும் கருதி பிறருக்குத் தன்னாலான நன்மையைச் செய்கிறான். அவ்வன்பு அதிகமாகும் போது பிறருடைய தேவையைத் தன்னுடைய தேவையை விட முக்கியமானதாகக் கருதி அதைப் பூர்த்தி செய்ய முயலுகிறான். பிறருக்குரியதை பிறருக்குக் கொடுத்தும் தனக்குரியதை தனக்கும் எடுத்துக் கொள்கிறான். பிறருக்குரிய உரிமைகளுக்குப் பாதகம் வராமல் நடந்து கொள்வதே நீதியாகும்.

திருக்குர்ஆனில் (விசுவாசிகளே!)

''நம்பிக்கைக்குத் துரோகம் செய்யாமல் நேர்மையாகவும் நீங்கள் நீதி செலுத்தும்படியும், பிறருக்கு உபகாரம் செய்யும்படியும், இனபந்துகளுக்குக் கொடுக்கும்படியும், அல்லாஹ் கட்டளை இடுகிறான். நீங்கள் மானக்கேடான தீயகாரியங்களையும், விலக்கப்பட்ட காரியங்களையும், கட்டளைக்கு மாறு செய்வதையும், கலகம் விளைவிப்பதையும் செய்யாதிருக்கும்படி விலக்கியிருக்கிறான்'' என்று கூறப்பட்டுள்ளது.

இலஞ்சம், வாங்குபவனையும், இலஞ்சம் கொடுப்பவனையும், இடையில் இருந்து வாங்கிக் கொள்கிறவனையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்துள்ளார்கள்.

அல்குர்ஆனில் ''உங்கள் பொருட்களை ஒருவருக்கொருவர் அநியாயமாக அபகரிக்க வேண்டாம். நீங்கள் தெரிந்து அநியாயமாக மக்களுடைய பொருட்களை அபகரிப்பதற்காக வேண்டி, அதிகாரிகளிடம் செல்வதற்குப் பொருளைச் சாதகமாக வைத்துக் கொள்ள வேண்டாம்'' என அல் - குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்''எவன் தனக்குச் சொந்தமில்லாத ஒரு பொருளைத் தனக்கு சொந்தம் என்று வாதிடுவானோ அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்லன். அவன் தன்னுடைய இருப்பிடத்தை நரகத்தில் தேடிக் கொள்ளட்டும்'' என்றார்கள். ஆகவே ஒவ்வொரு முஸ்லிமும் நீதி நேர்மையுடன் வாழ வேண்டும்.

## நம்பிக்கை நாணயம்

பொருள் சம்பாதிக்கும் போதும், கொடுக்கல் வாங்கல் செய்யும் போதும், அமானிதப்பொருட்களைப் பாதுகாக்கும் போதும், நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். ஒரு நல்ல வியாபாரிக்கு அவசியமானது உண்மை, நேர்மை, நம்பிக்கை ஆகிய குணங்களாகும். இவை அனைத்தும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காணப்பட்டன.

ஒருமுறை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடைத்தெருவிற்குப் போய்க்கொண்டிருக்கும் போது ஒரு தானியக் குவியலினுள் கையை விட்டுப் பார்த்தார்கள் அப்பொழுது அங்கு ஈரம் இருப்பதைக் கண்டு அந்த வியாபாரியைக் கண்டித்தார்கள்.

ஹலாலான வழியில் சம்பாதிப்பது அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகளுக்கு அடுத்தபடியான கடமையாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் எவ்விதமான சம்பாத்தியம் மேலானது என்று கேட்கப்பட்ட போது ''தன்னுடைய கையினால் முயற்சி செய்து பெறுகின்ற சம்பாத்தியமும் பொய்யும், நம்பிக்கை மோசடியும் இல்லாத வியாபாரமும் ஆகும்'' என்று கூறினார்கள்.

''விசுவாசிகளே! நீங்கள் ஒருவர் பொருளை மற்றொருவர் மனசமாதானத்துடன் வியாபார மூலமாக பெற்றுக்கொள்ளலாமேயன்றி, விரோதமான வழியில் உட்கொள்ள வேண்டாம். அப்படிச்செய்து நீங்கள் உங்களை நாசமாக்கிக் கொள்ள வேண்டாம்'' என அல்-குர்ஆன் கூறுகின்றது.

மோசடி, நம்பிக்கைத்துரோகம், அநியாயமாகப் பொருளீட்டல் போன்ற நேர்மையீனங்கள் மு:மின்களிடம் காணப்படக்கூடாது. அதனால் தான்

‘‘எவரேனும் மோசம் செய்தால் அவர் அந்த மோசம் செய்த பொருளையும் மறுமையில் (தம்முடன்) கொண்டு வரவேண்டிய நிலையிருக்கும்.’’ (3:161) என்று அல்-குர்ஆன் எச்சரிக்கின்றது.

ஏமாற்றுதல், தந்திரம் செய்தல், நேர்மையற்ற முறைகளைக் கையாளுதல் போன்றன இருளுக்கு மேல் இருள் போன்றாகும். பொய்யுரைத்தல், வாக்குமீறுதல், கலப்படம் செய்தல், பொய்ச்சத்தியம் செய்தல் போன்ற துர்நடத்தையில் இருந்து விலகிக்கொள்வது அவசியமாகும்.

கூலிவேலை செய்தவர்களின் கூலியைத் தாமதப்படுத்தாமல் கொடுத்து விடல் வேண்டும். வேலை செய்பவனிடம் அதிகமாக வேலைவாங்கி வேலைக்குத் தக்கபடி கூலி கொடாதவர்கள் கியாமத்து நாளில் எனக்கு விரோதியாய் இருப்பார்கள். என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்தார்கள். ஆகவே செய்கின்ற செயற்பாடுகள் அனைத்தும் நாணயத்துடனும் நம்பிக்கையுடனும் அமைய வேண்டும்.

## பொறுமை

பொறுமை என்ற உயர்பண்பு மனிதனுக்கு அவசியமாகும். கஷ்டத்தையும், துன்பத்தையும் சகித்துக்கொள்வதும் நற்கருமம் செய்யும் போது சிரமத்தை பாராமல் இருப்பதுவுமே பொறுமையாகும். அல்லாஹ் மனித வாழ்வையும், மரணத்தையும், மனிதனை சோதித்துப் பார்ப்பதற்காகவே அமைத்தான்.“தன்னடியார்களைப் பயத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிரினங்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்புக்களாலும் சோதிப்பான் என்றும் இச்சோதனைகளை சகித்துக்கொள்ளும் முஃமின்களுக்கு நன்மாராயம் கூறும்படியும்” அல்லாஹ் தனது நபிக்குக் கட்டளையிடுகிறான். எனவே ஈமான் உள்ளவன் சோதனையின்போது தனது ஈமானைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பொறுமையைக் கடைப்பிடிக்கக்கூடியவனாக இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் வசதியுள்ள சந்தர்ப்பங்களில் கூட மனக்கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கு ஒரு விசுவாசிக்குப் பொறுமை தேவைப்படுகிறது. இதன் காரணமாகத்தான் அல்லாஹ் முஃமின்கள் மீது நோன்பை விதியாக்கியுள்ளான்.

‘‘நோன்பு பொறுமையின் அரைப்பாகம்’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மனிதர்களுக்கு வசதியோடு கூடிய வாழ்க்கை அமைவதும் அல்லாஹ்வின் ஒரு சோதனையாகும். அப்போது அவன் தனது மனோ இச்சைப்பிரகாரம் உலக வஸ்துக்களை அனுபவிப்பதில் அளவுகடந்து சென்றுவிடாமல் இருக்க பொறுமையைக் கையாள வேண்டியவனாக இருக்கிறான். மேலும் அல்லாஹ்வுக்கு வழிப்படும் விடயத்திலும் ஒரு முஃமினிடம் பொறுமை தேவைப்படுகின்றது. அல்லாஹ்வின் கட்டளைகளை எத்தனை சிரமங்கள் ஏற்பட்ட போதும் உரிய நேரத்தில் உரிய கட்டளைகளை நிறைவேற்றப் பொறுமை அவசியமாகின்றது.

ஒரு விசுவாசி கடுங்குளிரிலும் சிறப்பாக வுழு செய்து தொழுகையை நிறை வேற்றுகிறான். அது அல்லாஹ்வுக்காக அவன் மேற்கொள்ளும் தியாகம் மட்டுமன்றி அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில் அவன் கடைப்பிடிக்கும் பொறுமையாகும்.

பொறுமை மனிதனுக்கு எல்லா விடயங்களிலும் நிதானத்தை உணர்த்தும். பொறுமையாளி கோபம் கொள்ளக்கூடியவனாக இருக்கமாட்டான். இதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘மல்யுத்தத்தில் ஜெயிப்பவன் வீரனல்லன்.

யார் கோபத்தின் போது தனது உள்ளத்தை அடக்குகின்றானோ அவனே வீரனாவான்'' எனக் கூறியுள்ளார்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கும் போது மனஉறுதியும் வீரமும் துளிர்விடுகின்றன.

''நிச்சயமாக பொறுமையாளர்களுக்கு எண்ணிக்கையற்ற சன்மானங்கள் வழங்கப்படும்'' என்றும் ''அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்'' என்றும் அல்லாஹ் அருளியுள்ளான். ஆகவே அல்லாஹ் மீது நம்பிக்கை வைக்கின்ற ஒருவன் இஸ்லாத்தின்பால் போராடவும் துணிவுபெறுவான்.

''மக்களோடு வாழ்ந்து அவர்களிடம் இருந்து வரும் தீங்குகளை சகித்துக்கொண்டு வாழும் ஒரு முஸ்லிம் சிறந்தவனாவான்'' (திர்மிதி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் தனது பிரசாரவாழ்க்கையில் கடும் சோதனைகளை எதிர்நோக்கினாலும் திடமான நம்பிக்கையும் முழுமையான சகிப்புத் தன்மையுமே இறுதியில் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தன.

ஆகவே பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்வில் வெற்றிபெற வேண்டும். இஸ்லாமியப் பண்புகள் வளர்ந்தோங்க வேண்டும்.

## பணிவு

பணிவு என்பது அடங்கி நடத்தல், மரியாதை செய்தல், அடிபணிதல் ஆகியவற்றைக் குறிக்கும். பணிவு உயர்வைத் தரும். பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் கடைப்பிடித்துக் கர்வம் கொள்ளாமல் பணிவுடன் வாழும் முஸ்லிம் உயர்வைப் பெறுகிறான்.

அல்குர்ஆனில் ''அல்லாஹ்வின் நல்லடியார்கள் பெருமையடிக்கவோ பூமியில் கர்வம் கொண்டு நடக்கவோ மாட்டார்கள். (மாறாக) பணிவுடன் நடந்து செல்வர்'' (25:63) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''நீங்கள் பணிவுடன் பழகவேண்டும்'' என அல்லாஹ் எனக்கு வஹி இறக்கி இருக்கிறான். எந்த அளவுக்கெனில் நீங்கள் யாரையும் ஆக்கிரமிக்கும் அளவிற்கு போய்விடக் கூடாது. அளவு மீறிப் பெருமையும் அடிக்கக் கூடாது. (அபூதாவூத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபியாக இருந்தும் சமூகத் தலைவராக இருந்தும் ஒரு தொழிலையும் கேவலமாகக் கருதவில்லை. மனிதனுடைய மேன்மையும், தாழ்மையும் தொழிலினால் உண்டாவதில்லை என்றும் அவனுடைய சத்தியத்தினாலும், ஒழுக்கத்தினாலும், பணிவினாலுமே உண்டாவதென்றும் அவர்கள் அனுபவத்தில் காட்டினார்கள்.**

இஸ்லாமிய சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் அல் - குர்ஆன், அல் - ஹதீஸ்களின் அடிப்படையில் அமைந்த இஸ்லாமிய சட்டவாழ்வுக்கு அடங்கிக் கட்டுப்பட்டு அங்கு எடுக்கப்படும் தீர்ப்புகளுக்கு உடன்பட்டு நடப்பது அவசியமாகும். அம்முடிவுகள் தமக்குப் பாதகமாக இருப்பினும் சமூகத்தின் கட்டுக்கோப்பும் நலனும் கருதி அம்முடிவை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாய் இருக்கிறான்.



இலவச விநியோகத்திற்காக

அல்குர்ஆனில் ‘‘எவர்கள் ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்து அல்லாஹ்வுடைய சமூகத்தில் தங்களை தாழ்மைப்படுத்திக் கொண்டார்களோ அவர்களே சொர்க்கத்திற்கு உரியவர்கள். அங்கு அவர்கள் எக்காலமும் இருப்பார்கள். அல்லாஹ்வுடைய உண்மை விசுவாசிகள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் பேச ஆரம்பித்தால் அவர்களுக்கு ஸலாம் சொல்லிவிடுவார்கள். அவர்கள் இராக்காலங்களில் நின்றும், சாஷ்டானங்கள் செய்தும் அல்லாஹ்வை வணங்குவார்கள். இந்த மறுமையுடைய வீட்டை உலகில் பெருமையையும் கலகத்தையும் விரும்பாதவர் களுக்காகவே நாம் உண்டாக்கியிருக்கிறோம். நன்மையான முடிவு பக்திமான்களுக்கேதான்’’ என அல்லாஹ்தஆலா மிக அழகாகக் கூறுகின்றான்.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மிம்பரில் நின்றவாறு மக்களே! நீங்கள் தாழ்மையாக இருங்கள். ‘‘அல்லாஹ்வுக்காக எவன் தாழ்மையைக் கைக்கொள்கிறானோ அவனுடைய பதவியை அல்லாஹ் உயர்த்துவான். எவன் தன்னைச் சிறியவனாக எண்ணிக்கொள்கிறானோ அவன் மக்களுடைய பார்வையில் பெரியவனாகிறான். எவன் தற்பெருமை கொள்கிறானோ அவன் மக்களுடைய பார்வையில் மிகக் கேவலம் அடைகிறான்.’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் ‘‘ஆயிஷாவே! தாழ்மையைக் கைக்கொள்ளும் அல்லாஹ் தாழ்மையைக் கைக்கொண்டவர் மீது அன்பு வைக்கிறான். தற்பெருமை கொள்பவர்களை வெறுக்கிறான்’’ என்றும் மொழிந்தார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் அவனது வாழ்க்கையில் முதலில் அல்லாஹ்வுக்கும் அடுத்து பெற்றோருக்கும், ஆசிரியருக்கும், பெரியோருக்கும் பணிந்து நடத்தல் வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து பெற்றோரின் சொல்கேட்டு மரியாதையோடு நடப்பதும் அவசியமாகும்.

## மன்னிக்கும் மனப்பான்மை

இஸ்லாம் போதிக்கும் உயர்பண்புகளில் ஒன்றாக மன்னிக்கும் மனப்பான்மை விளங்குகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதனை மூலமாக மட்டுமன்றி சாதனைகள் மூலமாகவும், இத்தகைய உன்னதமான பண்பை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். மனிதன் அல்லாஹ்வுக்குப் புரியும் குற்றங்களுக்காக அல்லாஹ்விடம் நேரடியாகப் பாவமன்னிப்புக் கோரவேண்டும். எனினும் ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமுக்குச் செய்யும் குற்றங்களுக்காக அவனிடம் மன்னிப்புக்கோரி அவன் மன்னிக்காதவரை அல்லாஹ் அக்குற்றவாளியை மன்னிக்கமாட்டான். ஆகவே விசுவாசியிடம் மன்னிக்கும் மனப்பான்மை காணப்படவேண்டும்.

ஒருவன் அநியாயமாகத் கொலை செய்யப்பட்டால், அல்லது ஏதோ ஒரு வகையில் அவனுக்கு அநீதி இழைக்கப்பட்டால், இஸ்லாம் பழிவாங்கும் உரிமையைக் கொல்லப்பட்டவனின் வாரிசுக்கு அல்லது அநீதி இழைக்கப்பட்டவருக்கு வழங்குகிறது. எனினும் குற்றவாளியை மன்னித்து விட்டால் அதை அல்லாஹ் வரவேற்கின்றான்.

விசுவாசிகளே! உங்கள் மீது கொலைக்குப் பழிவாங்குவது விதியாக்கப் பட்டுள்ளது. எனினும் அக்கொலையுண்டவனின் சகோதரர்களால் கொலைகாரன் மன்னிக்கப்பட்டுவிட்டால் மிகக் கண்ணியமான முறையைப் பின்பற்றி அவனை கொலை செய்யாது விட்டுவிடுங்கள். (2:178)

இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மன்னிக்கும் குணத்தை நிறைவாகப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தனக்கு உணவில் நஞ்சூட்டிய யூதப்பெண்ணை மன்னித்தார்கள். மேலும் மஸ்ஜிதுன் நபவியில் சிறுநீர் கழித்த ஒரு நாட்டுப்புற அறபியையும் மன்னித்துக் கருணை காட்டினார்கள்.

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு மக்கா வெற்றி கொள்ளப்பட்ட போது முஸ்லிம்களுக்கு எதிரான விரோதிகள் கைதிகளாக்கப்பட்டனர். இக்கைதிகளுள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தை ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஈரலைச்சப்பித்துப்பிய ஹிந்தா என்ற பெண்ணும், ஸஹாபாக்களையும், நபியவர்களையும் இம்சைப்படுத்திய பலரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் தூதர் தங்களுக்கு என்ன செய்வார்களோ என்று பயந்தவர்களாக இருந்தனர். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவர்களைத் தாராளமாக மன்னித்தார்கள். இது காபிர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்குத் தூண்டுதலாக அமைந்தது.

''உங்களை யாராவது அவமானத்துள்ளாக்கினால், உங்களுடைய குறைகளில் எதையேனும் வைத்து உங்களை மானபங்கப்படுத்தினால் நீங்கள் அவருடைய குறைகளைச் சுட்டிக்காட்டி அவரை மானபங்கப்படுத்த வேண்டாம். ஏனெனில் அவனுடைய செயலே அவனை கஷ்டத்துக்குள்ளாக்கப்போதுமானதாகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)

அல்லாஹ்தஆலா அல்குர்ஆனில், உங்களின் கீழ் உள்ளவர்கள் தவறு செய்யும் போது கடுமையான வார்த்தைகளால் நிந்திப்பதோ, தண்டிப்பதோ நல்லதல்ல எனக் கூறியுள்ளான்.

> ''உங்களில் ஒருவர் மற்றவரை இழிவாகக் கருதிக் குற்றம் குறை கூற வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பட்டப்பெயர் சூட்டவும் வேண்டாம். விசுவாசங்கொண்டதன் பின்னர் கெட்ட பெயர் சூட்டுவது மிகப்பெரிய பாவமாகும்'' என அல்குர்ஆன் கூறுகின்றது.(49:11)

''இலைகள் உதிராததும் நிழல் மறையாததுமான ஒரு பசுமையான மரத்திற்குச் சமானமாக ஒரு மு.்.மின் இருப்பான்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்''

ஆகவே நாம் எம்மில் ஈமானியப் பண்புகளை வளர்த்துக் கொள்வதோடு நல்லமல்களைச் செய்து சிறந்த மு.்.மினாக வாழ்வோம்.

## செயற்பாடுகள்

சுருக்கமான விடை தருக.

1. ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கப் பண்புகள் யாவை?
2. ஒழுக்கப்பண்புகளைக் கொண்டு எவ்வாறு இஸ்லாமிய சமூகத்தைக் கட்டி எழுப்பலாம்?
3. ஆத்மீக ஈடேற்றத்துக்கு இன்றியமையாதவை எவை?
4. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மு.்.மினை எதற்கு ஒப்பிட்டுக் கூறினார்கள்?

## 3.4 நேரம் பேணல்

அல்லாஹுத்தஆலா இவ்வுலகத்தைப் படைப்பினங்களின் செயற்பாடுகளைக் கொண்டே அமைத்துள்ளான். சூரியன் உதிக்கின்றது, மறைகின்றது. பூமி சுற்றுகின்றது. இரவு, பகல் மாறி மாறி வருகின்றன. இச்செயற்பாட்டிற்கேற்ப மனிதசெயற்பாடு அமைகின்றது. இச்செயற்பாட்டுக்கு மாறாக, மனித செயற்பாடு அமையுமாயின் அவன் உலகத்துடன் தொடர்பாடல் அற்றவனாகக் காணப்படுகிறான்.

குழந்தை பிறந்து ஒரு வயது அடையும் வரை பல செயற்பாடுகளைச் செய்த பின்பே மெல்ல மெல்ல எழுந்து நடக்க ஆரம்பிக்கின்றது. பின்பு ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களை எதிர் நோக்கும் போதும் அதனுடைய வேலைத்திட்டங்களும் அதிகரிக்கின்றன. இவ்வேலைத் திட்டங்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டுமானால் நேரத்தைத் திட்டமிட்டு திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் வெற்றி காணக் கூடியதாக அமையும்.

இஸ்லாம் நேரத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்தும் மார்க்கமாகும். அல்குர்ஆன் காலத்தை அதிகாலை பொழுதின்மீது முற்பகலின் மீது, பகலின் மீது, இரவின்மீது சத்தியமாக என்று பிரித்துச் சத்தியம் செய்திருப்பதானது நேரத்திற்கு வழங்கும் முக்கியத்தை உணர்த்துகின்றது.

''வாழ்க்கை என்பது அல்லாஹ் நமக்கு அளித்த அருட்கொடையாகும். இந்த அருட்கொடையை நாம் எப்படிப் பயன்படுத்தினோம். என்பது பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவோம்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

மறுமையில் ஒவ்வொரு அடியானும் நான்கு கேள்விகளுக்குப் பதிலளிக்காதவரை அவ்விடத்தை விட்டு சிறிதேனும் நகரமுடியாது. அவை

1. வாழ்க்கையை எவ்வாறு கழித்தாய்.
2. வாலிபத்தை எவ்வாறு பயன்படுத்தினாய்.
3. செல்வத்தை எவ்வாறு திரட்டி எவ்வாறு செலவிட்டாய்.
4. பெற்ற அறிவின் மூலம் எந்த அளவு செயற்பட்டாய் என்பனவாகும். (பஸ்ஸார்)

இங்கு வாலிபகாலம், வாழ்ந்தகாலம் என்பன மிகவும் பிரதானமானவையாக அமைகின்றன. வாழ்க்கை என்பது காலத்தோடு ஒட்டியதாகும். அதை வீண்விரயம் செய்வது தனிமனிதனதும், சமூகத்தினதும், இம்மை, மறுமை வாழ்வைப் பாழ்படுத்திவிடுவதாகும். ஆதலால் ஒவ்வொரு முஸ்லிமும் தனது காலத்தையும் நேரத்தையும் மிகக்கவனமாகப் பயன்படுத்த வேண்டும். அவனைப் பொறுத்தவரை நேரம் என்பதே வாழ்க்கையாகும்.

ஹஸனுல்பஸரி (றஹ்) அவர்கள் ''நான் ஒரு கூட்டத்தினரைச் சந்தித்தேன். அவர்கள் தங்கள் செல்வத்தில் காட்டும் அக்கறையை விட நேரத்தைப் பயன்படுத்துவதில் அக்கறை செலுத்துகின்றார்கள்''என்று குறிப்பிட்டார்கள்.

''இரவும் பகலும் உன்மீது தொழிற்படுகின்றன. அவற்றால் நீ தொழிற்படுவாய்'' ''நேரம் வாள் போன்றது. அதனை நீர் வெட்டிவிட வேண்டும். இன்றேல் அது உன்னை வெட்டி விடும்''

நேரத்தை வீணாக்குவது அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிராகரிப்பதற்குச் சமமாகும். ‘‘ஒருநாள் புலர்ந்து அந்நாளில் எனது செயற்பாடுகளில் சிறிதேனும் முன்னேற்றம் காணாத வகையில் எனது ஆயுள் குறைந்து விடுமாயின் அதற்காக நான் கவலைப்படுவது போன்று வேறு எதற்காகவும் கவலைப்படமாட்டேன்.’’ என்று இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

நேரத்திற்கு சில கடமைகள் நிறைவேறாமலே சென்று விடும். அதற்காகத்தான் அல்லாஹ்தஆலா நேரம் குறிப்பிடப்பட்ட வணக்கமாக தொழுகையை வைத்துள்ளான். அதாவது குறித்த நேரத்திற்குத் தொழுகையை நிறைவேற்றும் போது அவனுடைய ஏனைய கடமைகளையும் நேரத்திற்கு நிறைவேற்றக்கூடியதாக அமையும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். ‘‘அறிவுடைய ஒருவன் நேரத்தை நான்கு பகுதிகளாக வகுத்துக் கொள்வான். அதில் ஒரு பங்கு நேரத்தில் அவன் தன் இரட்சகனை இபாதத்துச் செய்து கொண்டிருப்பான். அடுத்த பகுதியில் அவன் தன்னைச் சுயவிசாரணைக் குட்படுத்திக் கொள்வான். மூன்றாவது பகுதியில் அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி அவன் சிந்திப்பான். நான்காவது பகுதியில் தனது வாழ்க்கைக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான்’’ (இப்னுஹிப்பான்).

நேரத்தைத் திட்டமிடும் போது, ஒவ்வொருவரும் தனது ஓய்விற்கு ஒரு பகுதியை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் இஸ்லாம் அனுமதித்த பொழுது போக்குகளில் ஈடுபடவேண்டும்.

நேரம் போதாது என்று சொல்லிக் கொண்டிருக்காமல் இருக்கின்ற நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வே! ‘‘எமது உம்மத்தினரில் அதிகாலையிலேயே துயில் எழுபவர்களுக்கு நீ அருள் புரிவாயாக’’ (அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தனை செய்துள்ளார்கள். ஆதலால் அதிகாலையில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுது, ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றி உற்சாகத்துடன் அன்றைய தினத்தை ஆரம்பிக்கும்போது அன்றைய நாள் கடமைகள் அனைத்தும் சரியாக நிறைவேறும்.

தொழுகை நேரத்தில் தொழுவது, விளையாடும் நேரத்தில் விளையாடுவது, படிப்பதற்குரிய நேரத்தில் படிப்பது, நித்திரைக்குரிய நேரத்தில் நித்திரை செய்வது என்றவாறு ஒவ்வொரு நேரத்திற்குமுரிய பணிகளை உரிய முறைப்படி நிறைவேற்ற வேண்டும். ஒரு வேலைக்கென்று எல்லா நேரத்தையும் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

‘‘சூரியன் மறையும் நேரத்தில் அஸர் தொழுபவனது தொழுகை முனாபிக்கின் தொழுகையாகும்.’’ (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். நேரத்திற்கு செய்யும் வேலையை நேரத்திற்கே செய்து முடிக்க வேண்டும் என இவ்ஹதிஸ் வலியுறுத்துகின்றது. நேரம் பொன்னானது என்பார்கள். பொன்னை இழந்தால் பின்னர் அதனைத் தேடிக்கொள்ளலாம். ஆனால் தவறிப்போன நேரத்தை மீட்டிப்பெற முடியாது.

காலம் போகப்போக மனிதனின் ஆயுளும் குறைந்து கொண்டு செல்லுகிறது. என ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘‘பகல் நேரத்தில் நிறைவேற்றவேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ் இரவில் அங்கீகரிப்பதில்லை. அவ்வாறே இரவு நேரத்தில் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை அல்லாஹ் பகலில் அங்கீகரிப்பதில்லை’’ எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

‘‘சூறா அல் அஸ்ர்’’ மனித வெற்றிக்கான பாதை எது? என்பதை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது. என்று இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் மனிதன் காலத்தின் மகிமையை உணர்ந்து அதைப் பயன்படுத்த தவறினால் பெரும் நஷ்டத்தையே எதிர்கொள்ளவேண்டி வரும். மனிதன் காலத்தைச் சரியாக பயன்படுத்தினால் அவனது சொற்ப ஆயுளை மறுமையின் சுபீட்சத்துக்கான வழியாக ஆக்கி கொள்ள முடியும். எனவே நன்மைகளைச் செய்வதற்காக நாம் காலத்தையும் நேரத்தையும் பயன்படுத்த வேண்டும்.

**‘‘பனிக்கட்டிகளை விற்கும் ஒரு வியாபாரி அது கரைந்துவிடுமுன் விரைவாக விற்றுத்தீர்ப்பவனாக இருப்பின் அவனே நல்ல வியாபாரி ஆவான். அது போல் ஆயுள் வீணே விரைவாகக் கரைந்து விடுமுன் அதனை நற்செயல்கள் புரியப் பயன்படுத்துபவனே உண்மை முஸ்லிமாக இருப்பான்.’’**

## 3.5 பெரும்பாவங்கள்

தமது பொழுதைக் கழிப்பது குறித்து எந்தக் கவலையுமற்றவர்கள் தங்களுடைய நேரத்தை மட்டுமல்ல அடுத்தவர்களின் நேரத்தையும் வீண்விரயம் செய்து விடுகிறார்கள். சூது விளையாடுதல், மது அருந்துதல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், பட்டப்பெயர் சூட்டுதல், படுதூறு சொல்லுதல், விபச்சாரத்தில் ஈடுபடல், வீண் சண்டைசெய்தல், வீண்வார்த்தைகள் பேசுதல், பிறரைப் பழிவாங்கத் திட்டம் தீட்டுதல், களவெடுத்தல், கொள்ளையடித்தல், கேளிக்கைகள் வீண் விளையாட்டுக்களில் ஈடுபடல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், வீண் பழிசுமத்தல், வதந்திகளை உருவாக்குதல், சமூகங்களிடையே சண்டைகளையும் பிரச்சனைகளையும் ஏற்படுத்தல், ஆபாசமான படங்கள் பார்த்தல், பொய்சொல்லுதல் போன்ற பெரும் பாவங்களை செய்பவர்களைத் தௌபா செய்யாது அல்லாஹ் மன்னிக்க மாட்டான்.

குற்றமிழைப்போருக்கு மறுமையில் கிடைக்கவிருக்கும் தண்டனைகள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃறாஜ் என்னும் விண்ணுலக யாத்திரை சென்ற சமயம் சில பாவங்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் அவர்களுக்குக் கண்முன்னால் காட்டப்பட்டது. சிலரின் நாவுகள் நெருப்புக் கத்தரிக்கோலினால் துண்டிக்கப்படுவதைக் கண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அது பற்றிய வினவியபோது இவர்கள் பிறருக்கு உபதேசிப்பார்கள், ஆனால் தங்கள் செயல்களில் அதை எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என விளக்கம் கூறப்பட்டது. மேலும் புறம்சொல்பவர்கள் இறந்த சகோதரனின் இறைச்சியைச் சாப்பிட்டுக்கொண்டிருப்பதையும் கண்டார்கள். இவ்வாறு பெரும் பாவங்களில் ஈடுபட்டவர்களுக்கு மறுமையில் பலவாறாகத் தண்டனைகள் வழங்கப் படுவதைக் கண்டார்கள்.

அல்லாஹ்வுக்கு (எவரையேனும்) இணையாக்குதல், தாய், தந்தையருக்கு மாறு செய்தல், ஓர் உயிரைக் கொலைசெய்தல், பொய்சத்தியம் கூறல் ஆகியன பெரும்பாவங்களாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறான கொடியபாவங்களினால் பொன்னான நேரங்களை பாழாக்கி விடாமல், பயனுள்ள முறையில் கழிப்பது சிறப்புடையதாகும். அல்லாஹ்வும் றஸூலும் அப்பட்டமாகக் கண்டித்துச் செய்யத்தகாதவையென வெறுத்து தள்ளினார்களே அவை எல்லாம் பெரும் பாவங்களின்பாற்பட்டதாகும். ஈமான் கொண்ட முஸ்லிம் இவ்வாறான பாவங்களில் ஈடுபடமாட்டான்.

பொதுவாக தீமைகள், பாவங்கள் அனைத்தும் மனித இதயத்தில் இருந்துதான் ஏற்படுகின்றன என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருத்தாகும். ''மனித உடலில் ஒரு மாமிசப்பிண்டம் உண்டு. அது திருந்தினால் அவனது உடல் முழுவதும் திருந்திவிடும். அது கெட்டுவிட்டால் உடல் முழுவதும் கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள். அதுதான் இருதயம் ஆகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே உள்ளங்கள் திருந்துவதன் மூலம் ஒவ்வொரு மனிதனது செயல்களும் திருந்தி இறைவனிடத்தில் உண்மை அடியானாக வெற்றிபெற்று வாழ்வதற்கு அவனுக்கு வாழ்த்துக்கள் கிடைக்கின்றன.

## செயற்பாடுகள்

சரியாயின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் அடையாளம் இடுக.

1. ஈமான் நேரத்துடன் தொடர்புடையது. ( )
2. இவ்வுலக செயற்பாட்டிற்கு நேரம் அவசியமில்லை. ( )
3. இஸ்லாம் நேரத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்தும் மார்க்கமாகும். ( )
4. காலத்தை ஐந்து வகையாக வகுக்கலாம். ( )
5. அஸ்ர் என்ற பதத்தின் பொருள் உதவியாகும். ( )
6. மறுமையில் ஒவ்வொரு அடியானும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். ( )
7. அறிவுடையவன் நேரத்தை நான்கு பகுதியாக வகுப்பர். ( )
8. காலம் போகப்போக மனிதனின் ஆயுள் கூடுகின்றது. ( )
9. அல்லாஹ்வால் மன்னிக்க முடியாத குற்றம் களவு எடுத்தல் ஆகும். ( )
10. ஒரு மு.்.மின் ஈமான் உள்ள நிலையில் தீயசெயல்களில் ். ஈடுபட மாட்டான ( )

**சுருக்கமான விடைதருக.**

1. காலம் மீது சத்தியம் செய்து ஆரம்பமாகும் சூறா எது?
2. காலத்தின் வகைகள் யாவை?
3. ஒரு அடியானிடம் மறுமையில் கேட்கப்படும் கேள்விகள் யாவை?
4. ஈமானின் தூயநிலை எவ்வாறு அடையாளம் காணப்படுகிறது?



இலவச விநியோகத்திற்காக